**C.C. No. 3/2025**

**Deposition of P.W. 3**

**Dated : 20.05.2026**

**Name : திரு. ராஜன்பாபு**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

குலசேகரம் தும்பகோடு கிராம புல எண் 529ல் 2ம் எதிரியின் அனுபவத்திற்கு முன்னால் யார் அதன் முதல் உரிமையாளர் என்றால் ஞாபகம் இல்லை. 2ம் எதிரி சொத்தை எந்த ஆண்டில் இருந்து அனுபவத்து வருகிறார் என்றால் ஞாபகம் இல்லை. மேற்கண்ட புல எண்ணில் உள்ள முதிர்ந்த ரப்பர் மரங்களை வெட்டி அப்புறப்படுத்த யார் மாவட்ட வனக் குழுவினரிடம் இருந்து அனுமதி வாங்கினார்கள் என்றால் அந்த இடத்தின் உரிமையாளர். உரிமையாளர் யார் என்றால் நான் பின்னிட்டு பணி ஓய்வு பெற்றதால் பெயர் தெரியாது. சாதாரணமாக மாவட்ட வனக்குழுவினர் மரங்களை வெட்டுவதற்கு நிபணந்தனை உடன் கூடிய உத்தரவு வழங்குவானர்கள் என்றால் சரிதான். 24.8.2017ம் தேதிக்கு முன்பாக எந்த மாதம் ரப்பர் மரங்களை அப்புறப்படுத்த உரிமம் வழங்கப்பட்டது என்றால் என்னுடைய பணி காலத்தில் வழங்கப்படவில்லை. சம்பவ இடத்திற்கு நான் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் ஞாபகம் இல்லை. அங்கு தயார் செய்யப்பட்ட ஆவணங்களில் நான் கையெழுத்து செய்யவில்லை

என்றால் சரிதான். குலசேகரம் வனச்சரக அலுவலகத்தில் இருந்து புல எண் 529ம் இடமானது எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 8 கி. மீ தொலைவு இருக்கும். கும்பகோடு பிரிவில் இருந்து வடக்காக 5கி.மீ சென்றால் சம்பவம் இடம் உள்ளது என்றால் சரியல்ல. கும்பகோடு பிரிவில் இருந்து கிழக்காக 2கி.மீ சென்றால் சம்பவம் இடம் உள்ளது. அந்த சாலையானது கரடுமுரடாக சாலை என்றால் சரிதான். அந்த சாலையானது அதிக வளைவுகள் உள்ள சாலைகள் என்றால் சரியல்ல. அந்த சாலை பஞ்சாயத்து சாலைஎன்றால் சரியல்ல. தனியார் தோட்டக்காரர்களின் சாலை ஆகும். பாதையில் தனியாருக்கு சொந்தமான தோட்டங்கள் உள்ளது என்றால் சரிதான். தனியார் தோட்டங்கள் அனைத்தும் வருவாய் துறை கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரிதான். புல எண் 529ல் சுற்றி எத்தனை வன எல்லை கற்கள் உள்ளது என்றால் தெரியாது. நான் பார்வையிட்ட வெட்டுமோடு பகுதிகளை எத்தனை நாட்களுக்கு முன்னால் தீ இடப்பட்டது என்றால் 2முதல் 5 நாட்கள் இருக்கும். எதிரிகளை எப்போது விசாரணை செய்தேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில் இருந்து எத்தனை லோடு மரங்களை வெட்டி எடுத்து வந்தார்கள் என்றால் ஏற்கனவே மரங்களை எடுத்து சென்றுவிட்டார்கள் அதனால் எவ்வளவு லோடு என

சொல்லமுடியாது. வெட்டப்பட்ட மரங்களை அப்புறப்படுத்த எத்தனை நாட்கள் ஆனது என கேட்டுதெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். புல எண் 529 எவ்வளவு விஸ்தீரனம் என்றால் தெரியாது. சம்பவ இடத்தில் இருந்து புல எண் 529 எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் தெரியாது. 1ம் எதிரி சம்பவ இடத்திற்கு அருகே எந்த இடத்தில் உரிமையாளர் என்றால் தெரியாது. புல எண் 529 க்கும் 1ம் எதிரிக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. அவர் தான் அனுபவித்து வருகிறார். மரங்கள் தீயில் கருகியாதாக அப்பகுதியின் பீட் காப்பாளர் முருகன் ஏதேனும் தகவல் கொடுத்தாரா என்றால் இல்லை. 2.9.2017ம் தேதி திருநெல்வேலி மண்டல வன பாதுகாப்பு தலைமையில் எத்தனை மணிக்கு சம்பவ இடம் சென்றேன் என்றால் நான் போகவில்லை. அதனால் 2.9.2017 ம் தேதி தயார் செய்யப்பட்ட வெட்டிமோட்டு பட்டியலில் நான் எத்தனை மணிக்கு கையெழுத்து செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. சம்பவ இடம் குலசேகரம் தெற்கு பீட்டை சேர்ந்தது என்றால் சரிதான். தெற்கு பீட் காப்பாளர் முருகன் மீது துறைரீதியான ஒழுங்கு முறை நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் இல்லை. சகபணியாளர் முருகன் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்ததால் அந்த வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக எதிரிகள் மீது பொய்யாக

வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் இடம் குறித்த சிட்டா, அடங்கல் ஆகியவை வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஞாபகம் இல்லை.